# March 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வளைகுடா நாடுகள் மீதான ஈரானின் தாக்குதலைக் கண்டித்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(i) அணுஆயுதம், நெடுந்தொலைவு ஏவுகணைகள் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ் சாட்டி, ஈரான் மீது இஸ்ரேல்- அமெரிக்கா கூட்டுத் தாக்குதலை நடத்தின. இதையடுத்து, பதிலுக்கு இஸ்ரேல் மீதும், அமெரிக்க நிலைகள் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீதும் ஈரான் ட்ரோன், ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தி வருகிறது.

(ii) இந்தத் தாக்குதலைக் கண்டித்தும், தாக்குதலை உடனடியாக ஈரான் நிறுத்த வலியுறுத்தியும், ஹோர்முஸ் நீரிணை மூடப்படுவதை எதிர்த்தும், ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில், அதன் நிரந்தரம் அல்லாத உறுப்பினராக இடம்பெற்றுள்ள பஹ்ரைன் தீர்மானம் கொண்டு வந்தது. அந்தத் தீர்மானம் கொண்டுவரக் கோரி பாகிஸ்தான், வங்கதேசம், பூடான், கனடா, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, எகிப்து, பிரான்ஸ், ஜெர்மனி, க்ரீஸ், இத்தாலி, ஜப்பான், குவைத், மலேசியா, மாலத்தீவு, மியான்மர், நியூஸிலாந்து, நார்வே, ஓமன், கத்தார், சவூதி அரேபியா, சிங்கப்பூர், ஸ்பெயின், உக்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், பிரிட்டன், அமெரிக்கா, யேமன், ஜாம்பியா உள்ளிட்ட 135 நாடுகள் தீர்மானம் முன்மொழிந்தன. இதில் இந்தியாவும் அடங்கும்.

(iii) தீர்மானத்தில் பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டானின் பிராந்திய இறையாண்மை, ஒருமைப்பாடு, அரசியல் சுதந்திரத்துக்கு முழு ஆதரவு அளிப்பதாகவும், அந்நாடுகள் மீதான ஈரானின் மிக மோசமான தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாகவும், அந்தத் தாக்குதல் சர்வதேச சட்டத்துக்கு எதிரானது மட்டுமன்றி, சர்வதேச அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் கூறப்பட் டிருந்தது.

(iv) வளைகுடா நாடுகள் மீதான ஈரானின் தாக்குதல் எந்தவித நிபந்தனையும் இன்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; அந்தநாடுகள் மீதான மறைமுக தாக்குதல் (தீவிரவாதக் குழுக்கள் மூலம் தாக்குதல்), அண்டை நாடுகளுக்கு விடுக்கப்படும் மிரட்டல் ஆகியவையும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

(v) தீர்மானத்துக்கு 13 நாடுகள் ஆதரவு:

- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள், 10 நிரந்தர மல்லாத உறுப்பு நாடுகள் உள்ளன. அதில் தீர்மானத்துக்கு ஆதரவாக அமெரிக்கா உள்பட 13 நாடுகள் வாக்களித்தன. எதிராக எந்த வாக்கும் பதிவாகவில்லை. மாறாக ஈரானின் நட்பு நாடுகளும், வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளுமான ரஷியாவும் சீனாவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதனால் தீர்மானம் நிறைவே றப்பட்டதாகத் தெரிவிக்கப்படடது.

2. ஈரான் மற்றும் அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப் படைகளுக்கு இடையேயான போருக்குப் பிறகு பாரசீக வளைகுடாவில் ஆபத்தான ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து இந்தியாவுக்கான முதல் எண்ணெய்க் கப்பல் மும்பை துறைமுகத்தை வந்தடைந்தது.

(i) ஈரான் மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற ஹூதிக்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற பெரும் அபாயத்துக்கு இடையே, கப்பல் போக்குவரத்தை அடையாளம் காண உதவும் தானியங்கி அடையாள தொழில்நுட்ப அமைப்பின் (ஏஐஎஸ்) டிரான்ஸ்பாண்டரை அணைத்தபடி மாலுமிகள் கப்பலை இயக்கி, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்துள்ளனர்.

(ii) ஏதென்ஸின் ஷெங்லாங் கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான லைபீரிய கொடி பொருத்திய 'ஷெங்லாங் சூயஸ்மேக்ஸ்' என்ற இந்தக் கப்பல் சவூதி அரேபியாவின் ராஸ் டனூரா துறைமுகத்தில் கச்சா எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு கடந்த மார்ச் 3-ஆம் தேதி இந்தியாவுக்கு புறப்பட்டது. கடல்சார் கண்காணிப்புத் தரவுகளின்படி இந்தக் கப்பல் ஹோர்முஸ் நீரிணைப் பகுதிக்கு மார்ச் 8-ஆம் தேதி வந்துள்ளது. அதன் பிறகு, கப்பலின் ஏஐஎஸ் டிரான்ஸ் பாண்டர் அணைக்கப்பட்டு, மீண்டும்

மார்ச் 9-ஆம் தேதி இயக்கப்பட்டுள்ளது.

(iii) இந்தக் குறுகலான நீரிணைப் பகுதியில் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் இருக்க, இந்த ஏஐஎஸ் டிரான்ஸ்பாண்டர் கப்பல்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், ஈரானின் தாக்குதல் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக, மாலுமிகள் அந்த டிரான்ஸ்பாண்டரை அணைத்தபடி இயக்கியுள்ளனர்.

(iv) இந்தக் கப்பல், மும்பை துறைமுகத்துக்கு வந்தடைந்தது. கப்பலில் ஏற்றிவரப்பட்டுள்ள 1.35 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய், கிழக்கு மும்பையின் மஹுல் பகுதியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

3. மத்திய கிழக்கு போர் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகம் மார்ச் மாதத்தில் மட்டும் நாளொன்றுக்கு 80 லட்சம் பீப்பாய் வரை குறையும் என சர்வதேச எரிசக்தி முகமை (ஐஇஏ) எச்சரித்துள்ளது.

(i) இது உலக வரலாற்றிலேயே கச்சா எண்ணெய் சந்தையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பாதிப்பு என்று தனது மாதாந்திர அறிக்கையில் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

(ii) ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த பிப். 28 வான் வழித் தாக்குதலைத் தொடங்கியதிலிருந்து சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடும் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வருகிறது.

(iii) உலகின் மிக முக்கியக்கடல் வழிப் பாதையான ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. மாற்றுப் பாதைகள் இல்லாத சூழலில், இராக், கத்தார், குவைத், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா போன்ற நாடுகள் தங்களின் எண் ணெய் உற்பத்தியைக் குறைக்கவோ அல்லது முழுமையாக நிறுத்தவோ வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன.

(iv) இதன் எதிரொலியாக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 120 டாலர் வரை உயர்ந்த நிலையில், வியாழக்கிழமை சுமார் 96 டாலருக்கு வர்த்தகமாகி வருகிறது. போரின் தீவிரத்தால் உலகளாவிய நுகர்வு வளர்ச்சி மதிப்பீட்டையும் சுமார் 25 சதவீதம் வரை ஐஇஏ குறைத்துள்ளது.

(v) இந்த நெருக்கடியைச் சமாளிக்கும் விதமாக, சர்வதேச எரிசக்தி முகமையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்றிணைந்து, தங்களின் அவசர கால இருப்பிலிருந்து 40 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை சந்தையில் விடுவிக்க ஒருமனதாக ஒப்புக் கொண்டுள்ளன. கடந்த புதன்கிழமை எடுக்கப்பட்ட இந்த முடிவின் மூலம் தட்டுப்பாட்டைப் போக்கி சந்தையை ஓரளவுக்குச் சீராக்க முடியும் என்று ஐஇஏ நம்புகிறது.

4. சீனாவின் வருடாந்திர நாடாளுமன்றக் கூட்டத் 2 வார விவாதங் தொடர்ந்த வியாழக்கிமைவுடன் முடிவடைந்தது.

(i) சுமார் 5,000 பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த முக்கிய அமர்வில், நாட்டின் பொருளாதார மந்தநிலையைச் சீரமைப்பதற்கான 15-ஆவது ஐந்தாண்டுத் திட்டம், ராணுவ நிதி உதர்வு, சிறுபாவைந்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ii) அமெரிக்காவுடன் வர்த்தகப் போட்டி, உள்நாட்டில் சரிந்து வரும் ரியல் எஸ்டேட் துறை போன்றவற்றால் சீன பொருளாதாரம் சவாலை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு சீன பொருளாதார மதிப்பு 20 லட்சம் கோடி டாலராக இருந்தபோதிலும், மக்களிடையே நுகர்வு மந்தமாகவே உள்ளது. இதைச் சரிசெய்யவும், ஏஜ. உள்பட நவீன தொழில்நுட்பங்களில் உலகளாவிய தலைவராக உருவெடுக்கவும் புதிய ஐந்தாண்டுத் திட்டம் இலக்கு வைத்துள்ளது.

(iii) பலப்படுத்தப்படும் ராணுவம்:

- இந்த ஆண்டு சீன பாதுகாப்பு பட்ஜெட் 7 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. அண்மையில் ஊழல் புகாரில் சில அதிகாரிகள் நீக்கப்பட்ட நிலையில், 'ராணுவத்தினர் கம்யூனிஸ்ட் கட்சிக்கும்

அதன் தலைமைக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும் என்று அதிபர் ஷி ஜின்பிங் வலியுறுத்தினார்.

(iv) மண்டரின் மொழி கட்டாயம்:

- இக்கூட்டத்தொடரில் இனச் சிறு பான்மையினர் தொடர்பான சர்ச்சைக்குரிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி, திபெத்தியர்கள், உய்குர் முஸ்லிம்கள் உள்பட 56 இனக் குழுக்களின் கல்வியில் 'மண்டரின்' மொழி இனி கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. இது சிறுபான்மையினரின் கலாசாரத்தை அழிக்கும் செயல் என மனித உரிமை ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர்.

(v) தொழிலாளர், சுற்றுச்சூழல் நலன்:

- சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு கார்பன் உமிழ்வைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஊழியர்களின் நலன் கருதி அவர்களின் ஆண்டு விடுமுறை 10 நாள்களாக (முன்பு 5) உயர்த்தப்பட்டுள்ளது. வேலை நேரம் முடிந்த பிறகு, அலுலக குறுஞ்செய்திகளுக்கு பதிலளிகத் தேவையில்லை போன்ற மாற்றகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

5. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்பான நோட்டீஸில் 193 எம்.பி.க்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

(i) எஸ்.ஐ.ஆர். முடிந்த பிறகு வெளியான இறுதி வாக்காளர் பட்டியலில், தமிழகம், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் பல லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. பாஜகவும், தேர்தல் ஆணையமுமே திட்டமிட்டு வாக்காளர்களை நீக்கிவிட்டதாக திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

(ii) சட்டப்படி இதுபோன்ற நோட்டீஸில் மக்களவை எம்.பி.க்கள் 100 பேரும், மாநிலங்க ளவை எம்.பி.க்கள் 50 பேரும் குறைந்தபட்சம் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அப்போது தான் நோட்டீஸை அளிக்க முடியும். ஆனால் தற்போது 193 எம்.பி.க்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

(iii) அந்த நோட்டீஸில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பாகுபாட்டுடன் நடந்து கொண்டார் என்பது உள்ளிட்ட 7 குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

(iv) நீதிபதிகளை பதவி நீக்கும் நடை உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற முறையே தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கவும் கடைப்பிடிக்கப்படுகிறது.

(v) அதாவது, நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி, பதவி நீக்கம் செய்யப்படுவார். இந்திய வரலாற்றில் இதுவரை எந்த தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவரப் பட்டதில்லை. முதல்முறையாக ஞானேஷ் குமாருக்கு எதிராக அந்த முயற்சியில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளன.

6. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை பதவி நீக்கக்கோரி எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த தீர்மானம் தோல்வியுற்ற நிலையில், அவை அலுவல்களுக்கு அவர் மீண்டும் தலைமை வகித்தார்.

(i) அரசமைப்புச் சட்டப் பிரிவு 96-இன்கீழ் மக்களவைத் தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் பரிசீலனையில் உள்ளபோது, அவை அலுவல்களுக்கு அவர் தலைமை தாங்க முடியாது. எனவே, தனக்கு எதிராக நோட்டீஸ் அளிக்கப்பட்ட நாளில் இருந்து (கடந்த பிப்.10) அவை அலுவல்களுக்கு ஓம் பிர்லா தலைமை வகிக்கவில்லை. அவைக்கும் வரவில்லை.

7. தமிழக ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

(i) தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கேரள ஆளுநரான ஆர்.வி.ஆர்லேகர் தமிழக ஆளுநர் பொறுப்பை கூடுதலாக வகிப்பார் என்று குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பித்தார்.

(ii) இதையடுத்து சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

(iii) அவருக்கு தமிழகத்தின் 27-ஆவது ஆளுநராக சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

8. ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையே அதிகரித்து வரும் மோதல் மற்றும் உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பு மற்றும் இந்திய பொருளாதாரத்தில் தாக்கம்:

(i) மோதல் மற்றும் இராணுவ மோதல்

- அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் சம்பந்தப்பட்ட போர் பிப்ரவரி 28 அன்று தொடங்கி 12 நாட்களைத் தாண்டியுள்ளது. முந்தைய குறுகிய கால மோதல்களைப் போலல்லாமல், இது முன்கூட்டியே முடிவடைவதற்கான அறிகுறிகளைக் காட்டவில்லை.
- அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியா, ஈராக், குவைத், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைனில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை குறிவைக்க ஈரான் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி பதிலடி கொடுத்து வருகிறது.
- ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. இந்த குறுகிய நீர்வழிப் பாதை பாரசீக வளைகுடாவை ஓமன் வளைகுடா மற்றும் அரேபிய கடலுடன் இணைக்கும் முக்கிய இணைப்பாகும்.

(ii) ஜலசந்தியின் உலகளாவிய பொருளாதார முக்கியத்துவம்

- வளைகுடா நாடுகளிலிருந்து சர்வதேச சந்தைக்கு எண்ணெய் மற்றும் எரிவாயுவை ஏற்றுமதி செய்யும் முதன்மை பாதை ஹார்முஸ் ஜலசந்தி ஆகும். சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற முக்கிய நுகர்வோர் சவுதி அரேபியா, ஈராக், குவைத் மற்றும் பிற நாடுகளிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு இந்த பாதையை நம்பியுள்ளனர்.
- உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதியில் தோராயமாக 20% இந்த ஜலசந்தி வழியாகவே செல்கிறது, தினமும் சுமார் 20 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் கொண்டு செல்லப்படுகிறது.
- ஈரான் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், ட்ரோன்கள், அதிவேக படகுகள் மற்றும் கடல் கண்ணிவெடிகளை சரக்குக் கப்பல்களை குறிவைக்க பயன்படுத்துகிறது. 16 ஈரானிய கண்ணிவெடி படகுகளை அழித்ததாக அமெரிக்கா அறிக்கைகள் அளித்த போதிலும், வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன.

(iii) இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பில் பாதிப்பு

- உலகின் மிகப்பெரிய எண்ணெய் நுகர்வோரில் இந்தியாவும் ஒன்று, அதன் கச்சா எண்ணெயில் 88% 40 வெவ்வேறு நாடுகளிலிருந்தும், அதன் இயற்கை எரிவாயுவில் 50% க்கும் இறக்குமதி செய்கிறது.
- இந்தியா LPG க்கு முழுமையாக வளைகுடா நாடுகளையே சார்ந்துள்ளது, அதன் விநியோகத்தில் 90% சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கத்தாரில் இருந்து வருகிறது.
- ஈரானிய தாக்குதல்கள் காரணமாக கத்தார் LPG உற்பத்தியை முற்றிலுமாக நிறுத்தியுள்ளது, மேலும் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து விநியோகம் தற்போது தடுக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் உடனடி LPG பற்றாக்குறைக்கு வழிவகுத்துள்ளது.

(iv) இந்தியாவில் சமூக-பொருளாதார விளைவுகள்

- இந்திய அரசு வீட்டு உபயோக எல்பிஜி விநியோகத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது, இதன் விளைவாக நாடு தழுவிய அளவில் வணிக எல்பிஜி விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.
- வணிக சிலிண்டர்கள் தீர்ந்து போவதால் உணவகங்கள் மற்றும் விடுதிகள் செயல்பாட்டு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. இது சந்தைகளில் காய்கறிகள் தேக்கம், தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு மற்றும் விவசாயிகளுக்கு நிதி இழப்பு போன்ற இரண்டாம் நிலை பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது.
- பற்றாக்குறை மற்றும் அதன் விளைவாக உணவகங்களில் ஏற்படும் தாக்கம் பொதுமக்களிடையே பரவலான அச்சத்தை உருவாக்கியுள்ளது.

(v) இந்தியாவின் எதிர்வினையும் எதிர்காலக் கண்ணோட்டமும்

- இந்தியா தினமும் 5.5 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெயைப் பயன்படுத்துகிறது. ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்து செல்லும் மாற்று வழிகள் மற்றும் ஆதாரங்களை பெட்ரோலிய அமைச்சகம் தீவிரமாகத் தேடி வருகிறது.
- அவசரகால அரசாங்க உத்தரவுகள் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தியில் 25% அதிகரிப்புக்கு வழிவகுத்தன. இந்த தற்காலிக நடவடிக்கைகளின் செயல்திறன் வரும் நாட்களில் தீர்மானிக்கப்படும்.

(vi) நெறிமுறை மற்றும் அரசியல் ரீதியான விமர்சனம்

- அமெரிக்க அதிபர் டிரம்ப் தன்னை ஒரு சமாதானத் தூதர் என்று கூறிக்கொண்டாலும், இஸ்ரேலுடனான அவரது கூட்டணி பல நாடுகளின் செயல்பாட்டை முடக்கிய ஒரு போரைத் தொடங்கியுள்ளது.
- உலகளாவிய எரிசக்தி மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, போரை நிறுத்துவதே ஒரே வழியாகும்